ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

**शम्भो पदाब्जकटकं तव योऽधिशेते**
**देवस्य तस्य चरणाम्बु दयाम्बुधे त्वम् ।**
**मौलौ वहन् प्रथयसि श्रितवत्सलत्वं**
**तं त्वामसावहमहो न भजामि धिग्माम् ॥ स्तुतिपद्धतिः ।**

ஸகலப்பிராணிகளுக்கும் சுகத்தையளிக்கும் ஹே சம்போ! உமது பங்கயம் போன்ற பாதங்களில் கடகமாய் விளங்கும் ஆதிசேஷனை எவர் தமக்குப் படுக்கையாகச் செய்து கொண்டு உறங்குகிறாரோ? நித்யப்பிரகாசமாய் விளங்கும் அந்த மஹாவிஷ்ணுவினுடைய சரணங்களிலிருந் துண்டான கங்கையை; கருணைக்கடலாகிய நீர் சிரஸில்தரித்து கங்காதார் என்று பிரஸித்திபெற்றிருக்கிறீர் அவ்வித மஹிமை பொருந்தியவரும், பக்தர்களைப் பாதுகாப்பதில் பிரீதியுடன் கூடியவருமான உம்மை இந்த நான் விதிப்படி பூஜிக்கவில்லை. என் ஜந்மா நிந்திக்கத்தகுந்தது கஷ்டம்!

**मानुषं प्राप्य ये जन्म पूजयन्ति न शङ्करम् ।**
**जल्पन्तः पशवस्ते हि शृङ्गपुच्छविवर्जिताः ॥**

எவர்கள் மானிடப்பிறவியைப்பெற்றும் ஸ்ரீசங்கரரைப்பக்தியுடன் பூஜிக்கவில்லையோ அவர்கள் கொம்பும் வாலுமில்லாத பேசும் பசுக்களாகிறார்கள் என்று மஹான்கள் சொல்லியிருக்கின்ற படியால். அதற்கிணங்க மனிதனாக ஜன்மாவையடைந்த நான் இந்த ஜன்மாவிற்கு முக்கியமான பயனாய்க் கூறப்படும் ஸ்ரீபகவானுடைய ஆராதனத்தைச் செய்யாமல் காமம் குரோதம் முதலான தோஷங்களுக்காளாகி பாபகர்மாக்களையே இதுவரையில் செய்து நரகதுக்கத்தை யனுபவிப்பதற்குப்பாத்திரனாகிவிட்டேன் என்று அதிகமான மனக்கவலைகொண்ட ஒரு ஆஸ்திகர் தம்மைப்பற்றியே நிந்தித்துக் கொள்கிறார். ஆகையால் நாமனைவரும் கெட்டகர்மாக்களைச் செய்யாமல் பகவதாராதனம் செய்து அதினால் உத்தமமான மோக்ஷசுகத்தைப்பெற முயலவேண்டும்.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

# ஸ்ரீ தப்ரபக்த சரிதம்.

மஹாசிவராத்திரி புண்யகாலத்தில்
அத்வைதஸபா பண்டிதரான பிர்மஸ்ரீ
யக்ஞஸ்வாமி சாஸ்திரிகளவர்களால் செய்யப்பட்ட
உபன்யாசத்தின் சுருக்கம்.

(௧௪அ-வதுபக்கத்தொடர்ச்சி.)

குருவின் ஆக்ஞையைச்சிரமேற்கொண்ட அந்தப்பாலகன் குருவை வந்தனம் செய்தான், தம்முடைய சரணங்களில் மிகுந்த பக்தியுடன் நமஸ்காரம்செய்யும் அப்பாலகனைக் குரு தம்முடைய கைகளால் ஆதரவுடன் தூக்கி நிற்கவைத்து,

**सन्त्वाशिषस्त्वयि सतां सफलाः प्रसादो**
**गौरीपतेरनवधिः सुमतेस्तु दीर्घम् ।**
**आयुश्च वज्रमिव ते वपुरस्त्वरोग-**
**मैश्वर्यमक्षतमुपैतु कुलं च वृद्धिम् ॥**

"ஹே, ஸ்ரீபதே, உனது விஷயத்தில் பெரியோர்களால் கூறப் படும் ஆசிவசனங்கள் அவ்வாறே பலத்தைக் கொடுக்கின்றனவாக இருக்கட்டும். ஹே, சிறந்தபுத்தியையுடையவனே ஸ்ரீ கௌரீ பதியினுடைய அதிகமான பிரஸாதமும் உனக்கு ஏற்படட்டும், வெகுகாலம்வரை தீர்க்கமாய் விளங்கும் ஆயுளையும் நீ பெறவேண் டும். உனது சரீரமும் ரோகமின்றி வஜ்ராயுதம்போல்திருடமாய் இருக்கட்டும் பூர்ணமான ஐசுவரியமும் உனக்கு உண்டாகட்டும். உனது குலமும் விசேஷமாக விருத்தியடையட்டும்" என்று ஆசி

கூறினர். அப்பால் ஸ்ரீபதி குருவால் செய்யப்பட்ட அனுக்கிரகத்தைப் பெற்று பிதாவுடன் கிருகத்திற்குவந்தான். பிறகு தப்ர பக்தர் பையனைப் பார்யையிடம் ஒப்புவித்து "சீக்கிரம் கார்யங்கள் ஆகட்டும்" என ஆக்ஞாபித்தார். அவளும் உடனே குழந்தைக்கு வாஸனைத்தைலங்களால் ஸ்நானம் செய்துவைத்து ஆஹாரம் கொடுத்து தம்மடியில் தூங்கும்படி செய்து பர்த்தாவை வரும்படி அழைத்தாள். உடனே தப்ரபக்தரும் தீக்ஷண்யமான கத்தியுடன் குழந்தையின் ஸமீபத்தில் வந்தார். ஸகலாவயவங்களினும் விபூதியால் அலங்கரிக்கப்பட்டவனும் ஆபரணங்களுடன் கூடியவனுமான புத்திரனுடைய ஆபரணங்களை எடுத்துவிட்டு "ஸாக்ஷாத் கைலாஸாதிபதிக்கு இது ஹவிஸ்ஸாக உபயோகப்படுகின்றபடியால் கண்ணீர்ஜலம் இதில் விழுந்தால் தோஷமுள்ளதாய்விடும். அம்மஹான் கிரகிக்கமாட்டார். ஆகையால் நீ அற்பங்கூட வியஸனப்படுவது உசிதமில்லை. என்று தமது பத்தினியிடம் அறிவித்து அவளது மனத்தைத் திருடப்படுத்திவிட்டுப் பிறகு "ஓம் நமச்சிவாய" என்று உச்சரித்துக்கொண்டு கத்தியால் பாலகனுடைய சிரஸ்ஸை முந்தி அறுத்தெடுத்தார். பிறகு பாதங்கள், கைகள் முதலான அங்கங்களையும் அறுத்து எடுத்து பார்யையிடம் கொடுத்து 'நன்கு பாகம் செய்' என்று ஆக்ஞாபித்தார், மிகவும் நற்குணம் பொருந்திய அவரது பத்னியும் 'ஸ்ரீ பரமேசுவரன் பக்தியைப் பரீக்ஷைசெய்ய வேண்டி இவ்விதம் ஏற்படுத்தியிருக்கிறார்' என்று தீர்மானித்து அற்பமேனும் மனக்கலக்கமில்லாமல் மிளகு, சீரகம் முதலான சகலசாமான்களையும் போட்டு நன்றாகப்பாகம் செய்தாள். சிரஸ்ஸைமாத்திரம் பையனைவளர்ப்பதற்கு ஏற்படுத்தியிருந்த உபமாதாபக்குவம் செய்தாள். அதிகமான ஆஜ்யத்தில் வருத்து நன்கு பக்குவம் செய்தான பிறகு "ஸித்தமாயிருக்கிறது. பெரியாரை அழைத்து வரலாமென்று" பதியிடம் அறிவித்தாள். உடனே தப்ரபக்தரும் விரைவில் தேவாலயம் சென்று முன்போல் முனிவிருக்ஷத்தினடியில் வீற்றிருக்கும் மகாபைரவாகிருதியாய் விளங்கும் அந்த மஹேசவரபக்தரை அடிபணிந்து "தங்களது ஆக்ஞானுசாரம் ஸித்தமாயிருக்கிறது. கிருபை செய்யவேண்டும். அதிக காலதாமதம் ஆய்

விட்டது, தங்களுக்கு அதிகமாக சிரமமேற்பட்டிருக்கும். இனியும்தாமதம்செய்யாமல்சீக்கிரமாக அனுக்கிரகம்செய்யவெண்டும்'' என்று மறுபடியும் வந்தன பூர்வகமாய்ப்பிரார்த்தித்தார். உடனே அதை அங்கீகரித்துக் கர்மகாண்ட, ஞானகாண்ட ஸ்வரூபமாய் விளங்கும் பாதுகைகளைச்சரணங்களில் தரித்துக் கால்முதல் சிரஸ் வரையில் விபூதியைத் தரித்துக்கொண்டு சுத்தமான கௌபீனத்துடன் யோகதண்டத்தைக் கையில் பிடித்துக்கொண்டு சிவந்திருக்கும் தம்கடைக்கண்பார்வையால் மூவுலகங்களுக்கும் பயத்தைக் கொடுக்கிறவராயுள்ள அந்தகௌரீபதி தப்ரபக்தருடைய கையைப்பிடித்துக்கொண்டு அவருடைய கிருகம் வந்து சேர்ந்தார். உடனே அம்மஹானைச் சிறந்தவோர் ஆஸனத்தில் அமர்த்தித்தங்கத் தாம்பாளத்தில் அவருடைய சரணங்களை வைத்து நன்கு பிரக்ஷாளனம் செய்து அந்தப் புண்ணிய தீர்த்தத்தைத் தாமும் தமது பத்னியும் புரோக்ஷணம் செய்துகொண்டு மறுபடியும் ஸ்வர்ணமலர்களாலும் சந்தனத்தாலும் அவருடைய சரணங்களை அர்ச்சித்துப் பிரதக்ஷிணம் செய்து நமஸ்காரம் செய்தார்கள். பிறகு போஜனசாலையில் ஸுவர்ணமயமான பீடத்தில் பக்தவேஷம் தரித்த அந்த ஹரரை உட்காரும்படிசெய்து முன்னிலையில் காண்டத்துடன் கூடிய இரண்டுபெரிய இலைகளைப்போட்டு முந்திப்பக்குவம்செய்யப்பட்டஹவிஸ்ஸைப்பரிவேஷணம்செய்து பிறகு நெய்யும் அன்னமுமாகக் கலந்து இலையிலிட்டுக் கற்பூர வாஸனையுடன் கூடிய தீர்த்தத்தை தப்ரபக்தர் அவரது கையில் கொடுத்தார். அந்தத் தீர்த்தத்தைக் கையில் வைத்துக்கொண்டே ஒரு தடவை சிரஸ்ஸை ஆட்டிக்கொண்டு தப்ரபக்தரிடம் கூறுகின்றார் "ஹே, தப்ரபக்த, பக்குவம் செய்யப்பட்ட சிரஸ்ஸைக் காணோம். அது தான் எனக்கு மிகவும் பிரியமானது. அஃது இல்லாமல் என்ன பிக்ஷை?" என்று மொழிந்ததைக் கேட்டுப் பயங்கொண்ட அந்தத் தம்பதிகள் உடனே உபமாதாவால் பக்குவம் செய்யப்பட்ட சிரோபாகத்தையும் அவரது இலையில் பரிவேஷணம் செய்தார்கள். பிறகு தப்ரபக்தர் கையிலிருக்கும் தீர்த்தத்தை அருந்தவேண்டி அதற்குற்ற மந்திரத்தைச் சொன்னவுடன் பைரவரான ஈசன் சொல்லுகின்றார் "ஹே பக்த, அவஸ

ரப்படாதே; என்னுடைய நியமத்தை முற்றிலும் கேள். நான் ஒருவனாகஇருந்து புசிக்கிறவழக்கமில்லை. அவ்விதம் புசிப்பது மிகவும் பாபகர்மாவாகும். யாவராகிலும் ஓர் அதிதியை ஸாக்ஷி போஜனத்திற்காகக் கூட உட்கார்த்திவைக்க வேண்டும் சீச்கிரம் வெளியில் போய் பார்" என்றுகட்டளையிட்டார். அவரதுஆணை யைச் சிரமேற்கொண்டு தப்பாபக்தரும் வெளியில் போய் எவ்வ ளவு தேடியும் ஒருவராவது கிடைக்கவில்லை. உடனே அம்மஹா னிடம் சென்று "ஹே, ஸ்வாமின் எவ்வளவு தேடியும் ஒருபக் தர்கூடக் கிடைக்கவில்லையே; என் செய்வேன்" என்று அஞ்சலி பந்தம் செய்துகொண்டு "அன்னத்தில் உஷ்ணமில்லாவிட்டால் அதைப்புசிப்பது கூடாதென்று சாஸ்திரங்கள்கூறுகின்றபடியால் தாங்கள் புஜித்து சேஷத்தை எங்களுக்கும் அனுக்கிரகம் செய்ய வேண்டும்" என்று பிரார்த்தித்தார். இதைக் கேட்ட பரமேசுவ வரன் "நீயும் ஒரு பக்தன் தான். ஆகையால் வேறொருவரைத் தேடவேண்டாம். நீ உட்காரலாம்" என்று அவரை இருக்கும் படி சொன்னார். தப்பாபக்தர் "ஹே, மஹாத்மன், பெரியோர் கள் புஜித்தபிறகு தான் நான் புஜிக்கிறதென்று நியமமுண்டு, அவ் விதம் நேராவிட்டால் இலையைத்தான் பூஜிக்கிறது. வேறு ஒன் றையும் புசிப்பதில்லை" என்று தெரிவித்தார். ஸ்ரீ சங்கரர் "நீ எதைப்புசித்தாலும் சரி ஒரு பக்தனோடு கூடத்தான் நான் பாரணை செய்யவேண்டும். பக்தன் கிடைக்காவிட்டால் பாரணையில்லை. ஆகையால் எப்படியிருந்தாலும் நீ உட்காரவேண்டியது அவ சியம்" என்று கூறினார். (தொடரும்.)

உபயத்திராதிபர்.

---

# ஸ்ரீ கிருஷ்ணனின் ஆயுஷ்காலம்.

(கசுo-வது பக்கத்தொடர்ச்சி.)

இவ்விதமே விஷ்ணுபுராணம் 4-வது அம்சத்தில் 24-வது அத்தியாயத்தில் சொல்லும்போது,

यस्मिन् कृष्णो दिवं यातस्तस्मिन्नेव तदाऽहनि ।
प्रतिपन्नं कलियुगं तस्य संख्यां निबोधत ॥

எந்ததினத்தில் கிருஷ்ணன்ஸ்வர்க்கம் சென்ருரோ அன்று பகலி லேயே கலியுகம்வந்துவிட்டது என்ருர். ஆகவேகிருஷ்ணன்சென் றதற்கும் கலிவந்ததற்கும் நாள் வித்யாஸமில்லையென்ருயிற்று. இதனுல் பகவான் பூலோகத்தில் கிருஷ்ணவேஷத்தோடு 125வரு டம் தான் இருந்தனரென்பது தெற்றெனவிளங்கிற்று. ஆனுல் 125 வருடம் என்பது ஸௌரசாந்திரபார்ஹஸ்பத்ய ஸாவன நக்ஷத்திரமென்று இவ்வுலகில் வியவரிக்கப்படுகிற கணக்குகளைக் கொண்டு மானுஷவர்ஷம் என்று தீர்மானம் எவ்விதம் செய்யமுடி யும்? அதுஎன்தேவவர்ஷமாய்இருக்கக்கூடாது? தேவமானமாய்த் தானிருக்கலாமென்று அனுமானிக்கஇடமிருக்கிறது. ஏனெனில் பிர்மாதிதேவர்கள் கிருஷ்ணனிடம் வந்து "யதுவம்சத்தில் அவத ரித்ததங்களுக்கு 125 வருடங்கள் ஆய்விட்டனவென்று சொல் வதனுல் அவர்கள் தங்கள் மானத்தைக் கொண்டுதான் கூறியிருக் கலாமென்ருலோ கூறுவாம்.

இங்கு இவ்விதம் பிர்மாதிதேவர்கள் கூறியது மானுஷமான கணக்கின்படிதான் 125 வருடங்களென்று சொன்னுர்கள்.

விஷ்ணுபுராணம் 5 வது அம்சம் 23 வது அத்தியாயத்தில் கிருஷ்ணனை முசுகுந்தன் துதிக்கும்போது சொல்வது

முசுகுந்தரும் விருத்தகர்க்கருடைய வசனங்களை நினைத்துப் பார்த்துக் கிருஷ்ணனை வணங்கிச் சொல்கிருர். பரமேசுவர தாங் கள் விஷ்ணுவின் அம்சம் என்பதை நான் தெரிந்து கொண்டி ருக்கிறேன். முன்காலத்தில் கர்க்கர் 28 வது யுகத்தில் துவாபர யுகத்தின் முடிவில் பகவான் யதுவம்சத்தில் அவதரிக்கப் போகி ருர் என்று சொல்லியிருக்கிருர் என்றிருக்கிறது. இவ்விதம் முசு குந்தருடையவசனப்படி 28 வதுமகாயுகத்தில் துவாபரயுகத்தின் முடிவில் என்பதாதி வசனங்களால் மானுஷக் கணக்கே தவிர தைவிகமல்லவென்பது வெளியாயிற்று. மற்றும் கணிதசாஸ்தி ராதிகளால் பார்த்தால் 28வது மகாயுகத்தின் கலியுகம்இப்போது நடப்பதுதானென்றும் இதற்கு முன்சென்ற த்வாபரயுகத்தினிறு

தியிற்றன் பகவானது அவதாரமாயிற்றென்றும் இந்த வருடக் கணக்கின்படிதான் 125வயது இருந்தனரென்றும்வெளியாயிற்று. இதனால் இனி ஸ்ரீ பகவான் அவதரித்த வருடத்தையும் வைகுண்ட மேகின தினம் மாதம் வருடத்தையும் புத்திமான்கள் சுலப மாய்க் கண்டுகொள்ளலாம். அதாவது கலியுகம் ஆரம்பித்து இன்றைக்கு5029வருடங்களாகின்றன. ஸ்ரீகிருஷ்ணன்வைகுண்டயாத்திரையின்வருடம்அதுவே.அதற்குமுன் 125 வருடங்கள்இருந்தாரென்பதால் 8, 64000 வருடங்கள் த்வாபரயுகத்திற் கேற்பட்டதால்அதில் 125 ஐக் கழித்தால் த்வாபரயுகத்தின் 8, 63874 ல்பகவான் அவதாரம் செய்தார் என்றாயிற்று. இன்னும் ஸூக்ஷ்மமாய்பார்த்தால் இப்போது நாம் வ்யவகாரம்செய்யும் வருடங்களுள் ஸ்வபானு வருஷம் சிராவணமாதம் கிருஷ்ணபக்ஷம் அஷ்டமீ ரோகிணீ நக்ஷத்திரத்தில் இரவில் அவதரித்தாரென்று கிடைத்து விட்டது. இதைப்பற்றி ஒருவரும் விவாதம் செய்ய இடமிராதென்றே நம்பலாம்.

இனி ஸ்ரீ ராமபிரானை யமன்கூப்பிடும் சமயத்தில் துர்வாஸர் வந்ததனால் அவ்ரை உள்ளே விட்டாரென்பதற்காக லக்ஷ்மணன் முன்னதாகவே சேஷலோகத்திற்குச்சென்றதும்தாமும் ஒருவியாஜமாய் ஸ்வர்க்கலோகம் செல்லவேண்டி தமது புத்திரர்களையும், ஸகோதரபுத்திரர்களையும்ஒவ்வோரிடத்தில் ராஜ்யத்தில் ஸ்தாபித்துவிட்டுப்புற்பூண்டுமிருகம்பக்ஷி யாவற்றுக்கும்எம்மோடுவந்தால் ஸ்வர்க்கம் தருகிறோம் என்று கூவி ஸ்ரீ ராமபிரான் எல்லோரோடும் ஸரயூ நதியிலிறங்கியதாய்உத்தரராமாயணம் கூறுவதுபோல் ஸ்ரீகிருஷ்ணனும்எவ்விதம் யாதுகாரணம்பற்றிவைகுண்டம்சென்றாரென்பதை யறிய யாவருக்கும் ஆவல் இருக்கும் ஆதல்பற்றி அதனைக் கவனிப்பாம்.

இங்கு ஸ்ரீ கிருஷ்ணன் அவ்வாறுஇஷ்டப்படி செல்லவில்லை, மற்று ஸ்ரீ கிருஷ்ணனின் யாத்திரை ஸாமான்ய மனிதனுக்குப் போல் ஏற்பட்டது. அதாவது இவர் ஒரு மரத்தில் உல்லாஸமாய் வீற்றிருக்கும்போது ஸாமான்யனான ஒருவேடன் இவரை அம்பால் எய்ததனால் இறந்ததாக இருக்கிறது. இந்தக் கஷ்டம் பகவானுக்கு நேரக்காரணமென்ன ? இவரது வம்சத்தவர்கள் ஒரு

வரும் இதைப்பார்க்கவில்லையா? விருஷ்ணிகுலம் மிகவிசாலமாயிற்றே என்று கேட்கலாம். இனி அதைக் கவனிக்கப்புகின் இன்னும் பரிதாபமேற்படலாம். விருஷ்ணி குலம் ஸாமான்யமானதல்ல. வெகு விசாலமானது. இவ்வம்சத்தில் பிறந்த யாவரும் மிகப் பராக்கிரமசாலிகள். பகவானுக்கும் புத்திரர்களுண்டோவென்றால் அதற்குக் கணக்கில்லை. பகவானுக்கு 16108 ஸ்திரீகள் உள. அவர்களுள் பிரதான ஸ்திரீகள் 8 பெயர்கள். எல்லா ஸ்திரீகளுக்கும் பத்துப் பத்துப் புத்திரர்கள் உண்டானார்கள். ஆகவே பகவானது பிள்ளைகள் மொத்தம் 161080. இவ்வளவு புத்திரர்களும் தனது வம்சத்துப் பராக்கிரமசாலிகளான வீரர்களும் ஏதோகாரண வசத்தால் ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டு மடிந்து விட்டார்கள். பிறகு தானும் ஆயுதமில்லாதவாய் நாசமடைந்தார் என்ற அர்த்தத்தை அடியில்வரும் பாகவத சுலோகமே காட்டுகின்றது.

एवं नृपाणां क्षितिभारजन्मनामक्षौहिणीभिः परिवृत्ततेजसाम् ।
विधाय वैरं श्वसनो यथानलं मिथो वधेनोपरतो निरायुधः ॥

இவ்வம்சத்திலுதித்தவர்களே கணக்கில்லாமலேற் பட்டதால் இவர்களும் பூமிக்குபாரந்தானென்று பகவான் எண்ணி அடர்ந்த காட்டில் காற்றினால் தீயை உண்டாகி அழிவதுபோல் ஒருவருக்கொருவர் விரோதத்தை உண்டுபண்ணி மடியும்படி செய்து தானும் அப்படியானார் என்கிறார். ஆயினும் இவ்விதமாவதற்குக் காரணம் அடியில்வருமாறு இருக்கலாமென்பதை வரைந்துவிட்டு விஷயத்தை முடித்துக் கொள்கிறேன்.

பாரதம் ஸ்திரீபர்வாவில் துர்யோதனன் முதலிய யாவரும் இறந்த பிறகு திருதராஷ்டரன் மனைவியோடும், நாட்டுப் பெண்களோடும், வருத்தமடைந்துகொண்டு விதுரனாலும், வியாஸராலும் ஸமாதானம் செய்யப்பட்டுக் கொண்டிருக்கும்போது திருதராஷ்டரனுக்கு ஸமாதானம் செய்யப் பகவானும் போய்ச்சேர்ந்தார். அங்கு திருதராஷ்டரனுக்கும், காந்தாரிக்கும், மற்ற ஸ்திரீகளுக்கும் ஸமாதானம் சொன்னபிறகு ஸ்த்ரீகளெல்லோரும்யுத்தகளத்தில் தங்களது பர்த்தாக்கள் மடிந்து கிடக்குமிடத்தைக் காட்ட

வேண்டுமென்று ஸ்ரீ கிருஷ்ணனை வேண்டினர். அவ்விதமே பகவான் கூட்டிக்கொண்டுபோய் அந்தந்த ஸ்திரீகள் தங்கள் பர்த்தாக்களைக் கட்டிக்கொண்டு ஓலமிட்டு அலறித்தவிக்கும் கோரத்தைக் கண்ணுற்ற காந்தாரி மனம் தாங்காமல்,

पतिशुश्रूषया यन्मे तपः किञ्चिदुपाश्रितम् ।
तेन त्वां दुरवापेन शपे चक्रगदाधरम् ॥
यस्मात्परस्परं घ्नन्तो ज्ञातयः कुरुपाण्डवाः ।
उपेक्षितास्ते गोविन्द तस्माज्ज्ञातीन्वधिष्यसि ॥
त्वमप्युपस्थिते वर्षे षट्त्रिंशे मधुसूदन ।
हतज्ञातिर्हतामात्यो हतपुत्रो वनेचरः ॥
अनाथवदविज्ञातः लोकेष्वनभिलक्षितः ।
कुत्सितेनाभ्युपायेन निधनं समवाप्स्यसि ॥
तवाप्येवं हतसुत निहतज्ञातिबान्धवाः ।
स्त्रियः परिपतिष्यन्ति यथैता भरतस्त्रियः ॥

பதிசுச்ருஷையினால் என்னால் எந்த தபஸ் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறதோ பலமான அந்தமஹிமையினால்சக்கிரம்கதாயுதம் தரிக்கின்ற உன்னைச்சபிக்கின்றேன். ஞாதிகளான குருபாண்டவர்கள் சண்டை செய்ததை நீ உபேக்ஷைசெய்து நின்றதால் உனது ஞாதிகளை நீ கொல்வாயாக. மதுஸூதன! நீயும் 36.வது வருடத்தில் ஞாதிகள் மந்திரிகள் புத்திரர்களையும் சாகக்கொடுத்து அனாதையாய்க் காட்டில் திரிந்துகொண்டு உலகத்தில் ஒருவராலும் பார்க்கப்படாமலும் அறியப்படாமலும் அல்பமான வழியில் நீயும் நாசமடைவாயாக. பிள்ளைகளையும், ஞாதிகளையும், பந்துக்களையும் இழந்த உன்னுடைய ஸ்திரீகளும் இந்த பரதகுலத்து ஸ்திரீகள்போல் புலம்பித் தவித்து விழப்போகிறார்கள் என்று கடோரமாய்ச் சாபமிட்டனள். பகவானும் அம்மா நீ மிகஉத்தமியானதுபற்றி உனது வாக்கு வீணாகாது. அப்படியே நடக்கட்டும். ஆனால் உன்னுடைய புத்திரர்கள் இறந்ததற்கு நான் காரணமல்ல. உத்தமியான உனது வாக்குச்சொல்லேகாரணமென்பேன். ஏனெனில் பிரதிதினமும் யுத்தத்திற்குச் செல்லும் முன் துர்யோதனன் வந்து உன்னை நமஸ்கரித்து நிற்கும்போது நீ க்ஷேமமடை

வாயாக வென்று உன் வாக்கு வரவில்லை. மற்று यतो धर्मस्ततो जयः எங்குத் தர்மமோ அங்கு ஜயம் என்றுதான் அவன் இறக்கு மளவும் சொல்லிவந்தாய். ஆகவே தர்மனும், ஜயனும் உருக் கொண்டு நிற்குமிடத்தில் உனது வாக்கால்தான் அவர்களுக்கு ஜயம் கிடைத்தது என்று சொன்னார் என்றிருக்கிறது. ஆகை யால் இவ்விதம் லோகோபகாரத்திற்காக அவதரித்த பகவானுக் கும் இவ்விதம் ஸகிக்கமுடியாத சாபமும் அதன்படி நடக்கையும் ஏற்பட்டதனால் அவர் அவ்விதமே பரலோகம் சென்றனர். அவர் எப்போது சென்றனரோ அப்போதே கலியும் பிரவேசித் ததால் அவன் வரும்போதே உலகில் தனது அமுலைக் காண்பித்து விட்டானென்பதைப் பாகவதமே கூறுகிறது.

संप्रस्थिते द्वारकायां जिष्णौ बन्धुदिदृक्षया ।
ज्ञातुं च पुण्यश्लोकस्य कृष्णस्य च विचेष्टितम् ॥
व्यतीताः कतिचिन्मासाः तदा नायात्ततोऽर्जुनः ।
ददर्श घोररूपाणि निमित्तानि कुरूद्वहः ॥
कालस्य च गतिं रौद्रां विपर्यस्तर्तुधर्मिणः ।
पापीयसीं नृणां वार्तां क्रोधलोभानृतात्मनाम् ॥
जिह्मप्रायं व्यवहृतं शाठ्यमिश्रं च सौहृदम् ।
पितृमातृसुहृद्भ्रातृदम्पतीनां च कल्कनम् ॥
कन्याविक्रयिणं तातं सुतं पित्रोरपोषकम् ।
ब्राह्मणान्वेदविमुखान्शूद्रान्वै ब्रह्मवादिनः ॥

தீர்த்தயாத்திரை போய்வந்த விதுரர் அஸ்தினபுரத்திற்கு வந்த தும் தர்மபுத்திரர் முதலியவர்கள் அவரை வரவேற்றுத் தீர்த்த யாத்திரை மஹிமையையும் துவாரகையில் ஸ்ரீ கிருஷ்ணன் யாத வர்கள் முதலியவர்களுடைய க்ஷேமசமாசாரத்தையும் விசாரித்த போது அவர் அழகாய் எல்லாவற்றிற்கும் பதிற் கூறிவிட்டு யது குல நாசத்தையும் கிருஷ்ணன் பரலோகம் சென்றுவிட்டதையும் மட்டிலும் தெரிவிக்காமலே கொஞ்சநாளிருந்துவிட்டு அவ்விடம் விட்டகன்றார். அதன்பிறகு துவாரகையிற்போய் பந்துக்களைப பார்த்துவிட்டுக் கிருஷ்ணனது ஸமாசாரத்தையும் அறிந்து வரு

வோமென்று அண்ணாவினிடம் உத்தரவுபெற்றுக்கொண்டு அர்ஜுனன் கிளம்பிச் சில மாதங்கள் வரை திரும்பி வரவில்லை. இச்சமயம் தர்மபுத்திரருக்கு அனேக உலகக்கெடுதல்கள் ஆரம்பித்து விட்டதாய் அவரது கண்களுக்குப் புலப்பட்டன. காலம் மாறி விட்டது. ருது தர்மங்கள் வேற்றுமை பட்டுவிட்டன. ஜனங்கள் கோபம் பேராசை ஸ்வரூபர்களாய் இருந்துகொண்டு பாபமான வார்த்தையைப் பேசுகின்றனர். ஜனங்களது வியவகாரங்கள் கபடமாகவே இருக்கின்றன. ஒருவருக்கொருவர் ஸ்நேகமும் கபடமாகவே தோன்றுகிறது. தாய் தந்தைப் பதிகளுக்குள் கலகமதிகம். தகப்பன் பெண்ணை விற்கின்றான். தாய் தந்தையர்களைப் பிள்ளை போஷிப்பதில்லை. பிராமணர்கள் வேதத்தை விட்டொழிந்தனர். சூத்திரர்கள் பிரமவாதம் சொல்லத்தலைப்பட்டனர். இவ்விதமெல்லாம் அனேகக் கெடுதல்களைக் கண்டதாய் 1-வது ஸ்கந்தம் 14-வது அத்தியாயத்தில் கூறுகிறது. இவ்விதம் பகவான் சென்றதன் அறிகுறியைத் தர்மருக்குக் கலி அப்போதே காட்டி விட்டான். அத்தகைய இக்கலியின் ஆடம்பரத்தை இப்போது கேட்கவும் வேண்டுமோ.

ஆகவே ஆஸ்திகோத்தமர்களே! காலத்தின் கொடுமையால் அவதார மூர்த்திகளுக்கே கெடுதல் நேருமாதலால் இம்மகான் கிருஷ்ணன் கலி வந்தபின் நெடுங்காலம் ராமாவதாரம் போலிருப்பதழகல்லவென்றே தனது தேகத்தையும் சுற்றத்தாரையும் இருப்பிடத்தையும்கூட மாய்த்துக் கொண்டாரென்பது உண்மை. இத்தகைய காலத்திற் கன்ம வசத்தால் ஏதோ உத்தமமான மானிட ஜன்மத்தை அடைந்த நாம் இஜ்ஜன்மத்தை வீணாக்காது நம்மாறு பாடுகளை விலக்கிவிட்டு

**कालकालं प्रपन्नानां कालः किं नः करिष्यति ।**

காலகாலனைச்சரணமடைந்துவிட்ட நம்மைக்காலன் என்னசெய்யப் போகிறானென்ற நியாயப்படி காலகாலனின் அவதார மூர்த்தியின் பரமபீடாபிஷிக்தர்களான உத்தம குருமூர்த்திகளையும் சந்திர மௌளீசனையும் திரிபுர ஸுந்தரரையும் ஸேவித்துக் காலனை விட்டுத் தப்பிச் சுகம் பெறுவோமாக. சுபம்!

M. N. சுப்பிரமணிய சாஸ்திரி.

# விஷயதானம் செய்வோர்களின் அபிப்பிராயம்

# பத்திராதிபர்களைச் சாரமாட்டா

## ஓர் ஸந்தேஹம்.

அடுத்த அக்ஷய வருஷத்தில் சுபகாரியங்கள் செய்யலாமா? செய்யக்கூடாதா என்று சிலர்கள் கேழ்க்கிறார்கள். சோதிட சாஸ்திரத்தில் வருஷங்களின் பெயரைச் சொல்லுமிடத்தில் அக்ஷய வருஷமா க்ஷயவருஷமா என்று ஸந்தேஹிக்காமல் இருக்க "क्रोधनः क्षयः" குரோதன, க்ஷய, என்று பிரித்து பெயர்கள் சொல்லியிருக்கிறார். வருஷபலனைச் சொல்லுமிடத்தில்

**स्वाभिधानसमं ज्ञेयं फलमेषां मनीषिभिः ।**

தன் தன் பெயருக்கு சமான பலனை அறியவேண்டுமென்று இருப்பதில் விசேஷமாக விசாரிக்கும் வருஷத்துக்கு

**कार्पासगन्धतैलेषु मधुसस्यविनाशनम् ।**
**क्षयमाणाश्चापि नरा जीवन्ति क्षयवत्सरे ॥**

க்ஷயவருஷத்தில் பட்டு, சந்தனம், தைலம், கரும்பு, மது, பயிர் இவைகள் நாசமடையுமென்றும், மனிதர்கள் நாசமடைந்தாலும் ஜீவித்திருப்பார்களென்றும் சொல்லியிருக்கிறது. இது விஷயமாய் முகூர்த்தக் கிரந்தங்களான காலவிதானம், காலபிரகாசிகை, காலாமிருதம், காலதீபம், முகூர்த்த சிந்தாமணி, முகூர்த்தபதவி, முகூர்த்தமார்த்தாண்டம், முகூர்த்த கணபதி, சோதிடஸாரம், முகூர்த்தமாதவீயம், முகூர்த்த தீபிகை, இவைகளைக் கவனித்ததில் உத்தராயணத்தில் சுபகாரியங்கள் செய்யலாமென்றும் தக்ஷிணாயனத்தில் கூடாதென்றும் விதித்து

**वर्षान्ते वर्जयेत्पक्षं मासान्ते तु दिनत्रयम् ।**

வருஷக்கடைசியில் 15 நாளையும், மாதக்கடைசியில் 3 நாளையும் வர்ஜிக்கவேண்டுமென்று இருக்கிறதே தவிர பரிவர்த்திக் கடைசியான வருஷத்தில் சுபகாரியங்கள் செய்யக்கூடாதென்று விதிக்கவில்லை. "स्वाभिधानसमं ज्ञेयं" என்ற வசனப்படி இவ்வருஷம் தோஷமாகுமேல் குரோதன, பராபவ, முதலான சுமார் 15-வருஷங்களில் சுபமுகூர்த்தங்கள் விதித்திருப்பது எங்ஙனம் பொருந்தும். சோதிடம் அறிந்த வித்வான்கள் விசாரிக்கும் வருஷத்தில் சுபமுகூர்த்தங்கள் செய்யக் கூடாதென்று வசனங்கள் இருக்குமேல் நம்ஆர்பகர்மம்மூலம் தெரிவிக்கக்கோருகிறேன்.

ஜோஸியம், கஸ்தூரிரெங்கய்யங்கார். பள்ளத்தூர்.

உ

# ஸ்ரீ காஞ்சி மஹிமை.

## முதல் அத்தியாயம்,

### விஷய சூசனை.

[இந்த அத்தியாயம் பராசக்தி பலவிதமானபிலரூபமாயும்,யந்திரரூபமாயும், பிம்பரூபமாயும், வேறு பல ரூபமாயும், இருந்து தனது ஆதிக்கியத்தைக் காட்டுகின்கிற, க்ஷேத்திரங்கள் பல உள. அவற்றுள் பராசக்தி அந்த பிலயந்திர பிம்பரூபமாயிருக்கின்ற மகிமையையும், சிவஸ்வரூபமாயிருக்கின்ற அற்புதக் காக்ஷியையும், விஷ்ணுஸ்வரூபமாயிருக்கின்ற மோகனக் காட்சியையும் விளக்குவது ஸ்ரீ காஞ்சிமாநகரம். அதனால் ஸ்ரீ காஞ்சியம் பதி மேம்பாடுடையதாயிற்று என்பதையும். பராசக்தி சிவகாமேசுவராங்கஸ்தா, சிவஸ்வாதீனவல்லபா என்கிற நாமங்களை உடைத்தாயிருப்பதால் ஜோதிலிங்கசக்தி ஸ்வரூபிணியாயும், விஷ்ணுரூபிணி விஷ்ணுமாயா விலாஸினி, என்கிற நாமங்களைப் பெற்றதாக இருப்பதால் வரதராஜமூர்த்தியாயும் இருக்கின்றது என்பதையும் ஜோதிலிங்க சக்தி ஸ்வரூபமாயிருக்கின்ற அவசரம் முத்தான்மாக்கள் ஸர்வமந்திர ஸர்வக்ஞானவித்தியை அடையும் பொருட்டு என்பதையும் வரதராஜமூர்த்தியாயிருக்கின்ற அவசரம் பெத்தான்மாக்கள் மாயாவிலாஸமாயிருக்கின்ற இஷ்டகாமிய போகவித்திகளை அடையும் பொருட்டு என்பவையும் விளக்குவது.

இவைகளை அன்றி இவ்வத்தியாயம் காஞ்சிக்கு முதலாவரணத்தினெல்லையாக கிழக்கில் சமுத்திரம், தெற்கில் தக்ஷிணபினாகினி, மேற்கில் சிலாஹ்ருதம், வடக்கில் சுவாமிபுஷ்கரணி என்பனவும், இரண்டாம் ஆவரணத்தினெல்லையாக கிழக்கில் மாவலிபுரம், தெற்கில் தேவகிரி, மேற்கில் விரிஞ்சிபுரம், வடக்கில் நாகலாபுரம் என்பனவும், மூன்றாம் ஆவரணத்தினெல்லையாக கிழக்கில் திரிவேணி சங்கமநகரம், தெற்கில்வியாக்கிரபுரம், மேற்கில் க்ஷீராப்தி நகரம், வடக்கில் நந்திகங்காபுரம் என்பனவும், அமைந்துள்ளன எனவும், மூன்றாவரணங்களையுடைத்து எனவும், சத்தியவிரத க்ஷேத்திர முதலாக எண்ணப்பட்ட ஒன்பது நாமங்களையுடைத்து எனவும், கூறுவதுடன் பாலாற்றின் வரலாற்றையும், பராசக்தி மூன்றுவித ஸ்வரூபமானமையையும், அவ்வவற்றின் வரலாறுகளையும் விளக்குவது]

# ஸ்ரீ காஞ்சீ மஹிமை முதல் அத்தியாயம்.

## பீடத்திரய விவரணம்.

இப்பூமண்டலம் ஐம்பதுகோடி யோசனைவிசாலமுள்ளது. இதனுள்தேவி சம்பந்தமான பீடங்கள் ஆருயிரத்தூனூறு. அவற்றுள் அறுபத்துநான்கு பீடங்கள் சிறந்தன. அவற்றுள்ளும் ஐம்பத்தாறு பீடங்கள் சிறந்தன. அவற்றுள் முப்பத்தாறு பீடங்கள் சிறந்தன. அவற்றுள்ளும் பதினெண் பீடங்கள் சிறந்தன. அவற்றுள்ளும் மூன்று பீடங்கள் சிறந்தன.

அவையாவன:— காமராஜபீடம், ஜாலந்தரபீடம், ஒட்டியாணபீடம்.

இம்மூன்றுபீடங்களையும் பூஜித்தவர்:— ஹயக்கிரீவர், பிருகு முனிவர், வியாசமுனிவர்.

இவருள் காமராஜபீடத்தில் வாக்பவ கூடத்தைப் பூஜித்தவர் ஹயக்கிரீவர். ஜாலந்தரபீடத்தில் மனோபவமென்கிற மத்தியகூடத்தைப் பூஜித்தவர் பிருகு முனிவர். ஒட்யாணபீடத்தில் பராபீஜஸ்வரூபமான காமரூபத்தைப் பூஜித்தவர் வியாச முனிவர். காமராஜபீடம் காஞ்சிநகரத்திலும், * ஜாலந்தரபீடம் ஜ்வாலாமுகி என்கிற க்ஷேத்திரத்திலும், ஒட்யாணபீடம் ஜகந்நாதமென்கிற க்ஷேத்திரத்திலும் உள்ளன.

### காஞ்சிமண்டலத்தினெல்லை.

### (முதலாம் ஆவரணம்.)

கங்காநதிக்குத் தென்பாகத்தில் இருநூறு யோஜனை தூரத்திற்கு மேலுள்ள சமுத்திர கட்டத்தின் § அக்கினி திக்கே கிழக்கெல்லை. அதற்கு நிருருதியில் எழரை யோஜனை தூரத்திலுள்ள தக்ஷிண பினாகினியே தெற்கெல்லை. அதற்கு வாயுவில் எழுயோஜனை தூரத்திலுள்ள ¶ சிலாஹ்ருதமே மேற்கெல்லை. அதற்கு ஈசான்யத்தில் எட்டு யோஜனை தூரத்திலுள்ள சுவாமி புஷ்கரணியே வடக்கெல்லை.

---

* ஜாலந்தரபீடமும் ஒட்யாண பீடமும் வடதிசையிலுள்ளன.

§ காஞ்சி நகரம் யந்திரரூபமாய் நிருமித்திருப்பதாகலான் கோணமாகிய அக்கினிதிக்கே கிழக்கெல்லையாக எடுக்கப்பட்டது.

¶ சிலை என்றால் கல். ஹ்ருதம் என்றால் மடு. ஆகலான் அதுகல்லாறு எனவழங்கி வருகின்றது.

## கிழக்கெல்லையாகிய சமுத்திர கட்டத்தின் மகிமை.

கிழக்கெல்லையாகவுள்ள சமுத்திர கட்டம் காஞ்சிபதிக்கெல்லையாக அமைந்தமையானும்; சரஸ்வதிதேவி முன்னொருகாலத்தில் தனக்குநேர்ந்த ஒரு ‡ தோஷத்தைமாற்றிக்கொள்ள நதிஉருவங்கொண்டு இக்கடலிற் சங்கமமாய்ப் பரிசுத்தமடைந்து, தனது கணவனோடுசேர்ந்து சமுத்திரராஜனைப்பார்த்து, "இத்தீரத்தில் எவரெவர் எவ்வெக்காலங்களில் ஸ்நானஞ் செய்தபோதிலும் அவரெல்லாம் பரிசுத்தராய்ச் சிவபதமடைவர்" என்று வரமளித்தமையானும் இவ்வெல்லையாகிய சமுத்திரக் கட்டத்திற்கு ஸ்நானஞ் செய்பலாகாதென விதிக்கப்பட்ட காலங்களில்லையாயின.

## தெற்கெல்லையாகிய தக்ஷிணபினாகினியின் மகிமை,

முன்னொரு காலத்தில் அசுரகுருவாகிய பிருகுமுனிவர் சிவானுக்கிரகத்தினால் பூமியிற்கிடந்திருந்த பினாகம் என்னும் தனுசை எடுத்துத் தாங்கிய பொழுது கங்கை நதிரூபமாய்ப் பெருக்கெடுத்தோடியது. அதுகண்டமுனிவர் "இது பினாகினியிலுண்டானபடியால் † பினாகினி எனப்பெயர் பெற்று வழங்கக்கடவது என்றும், "இதில் ஸ்நானஞ்செய்பவர்கள் புண்ணிய ஸ்வரூபிகளாய்ச் சிவலோகமடையக் கடவர்கள் என்றும் வரமளித்தனர்.

## மேற்கெல்லையாகிய சிலாஹ்ருதத்தின் மகிமை,

முன்னொரு காலத்தில் அநுமார் அமிர்தம்போலும் பிழைப்பிக்கவல்ல ஒஷதிகளைப் பறித்தெடுத்து வரும்போது சிலாஹ்ருத தீர்த்தத்தில்அலம்பிப்பின்னர்லக்ஷ்மணரிடத்திற்கொண்டு போய்க் கொடுத்தனர். "அங்ஙனம் அலம்பியகாலத்தில் இதில் எவர் ஸ்நானஞ் செய்கின்றார்களோ அவர்கள் சித்தர்களாய் நெடுங்காலம் ஜீவித்திருந்து பின் தெய்வத்தன்மையையும், விஷ்ணு பதத்தையும் அடையக்கடவர்கள், என்று வரமளிக்கப்பெற்றது.

## வடக்கெல்லையாகிய சுவாமி புஷ்கரணியின் மகிமை,

முன்னொரு காலத்தில் விஷ்ணுமூர்த்தி லக்ஷ்மிதேவியைக் கல்யாணஞ் செய்துகொள்ளவேண்டும் என்று விரும்பிச்சித்த

---

‡ தோஷம் என்ற தன்பொருளைக் காஞ்சிப்புராணத்தில் சிவாத்தான படலத்திற் காண்க.

† பினாகினி என்னும்நதியானது பெண்ணையாறு எனவழங்குகின்றது.

வேடங்கொண்டு திருப்பதி எனவழங்கும் சேஷாசலத்தை வந்தடைந்தகாலத்தில் தம்முடன் வந்த சீடர்களுடைய ஸ்நானபான நிமித்தம் ஒரு தடாகத்தையுண்டுபண்ணி அதில் விரஜாநதியைப் பிரதிஷ்டை செய்து தாமும் தமது கல்யாணம் முடிந்தபின்னர் ஸ்நானஞ் செய்து ¶ சுவாமி புஷ்கரணி என்று பெயரிட்டு "இதில் எவர்கள் ஸ்நானஞ் செய்கின்றார்களோ அவர்கள் இவ்வுலகில் எல்லாப்போகங்களையும் அனுபவித்துப் பின்னர் எனது லோகத்தையடையக்கடவர்கள்" என்று வரமளித்தனர்.

இந்நான்கெல்லைக்குட்பட்ட பிரதேசம் துண்டீரனென்னும் அரசனால் நீதியோடு ஆளப்பட்டமையான் துண்டீர மண்டலம் எனப்பெயர் பெற்றது.

(இரண்டாம் ஆவரணம்.)

காஞ்சிக்குக் கிழக்கெல்லையாகிய சமுத்திரத்திற்கு ஒரு யோசனை மேற்கில் மாவலிபுரம். அதற்கு ஐந்து யோசனை நிருதியில் தேவகிபுரம், அதற்கு ஐந்து யோசனை வாயுவில் விரிஞ்சிபுரம், அதற்கு ஐந்து யோசனை ஈசானத்தில் நாகலாபுரம் அதற்கு ஐந்து யோசனை ஆக்னேயத்தில் முற்கூறிய மாவலிபுரம்.

வரலாறு

பூர்வத்தில்மஹாபலிச்சக்கரவர்த்தி பரமசிவானுக்கிரகம்பெற்றுப் பெருஞ்செல்வமடைந்து அங்கு வாழ்ந்திருந்தனனாதலால் மாவலிபுரம் எனவும், உக்கிரசேனன் என்னும் அரசனும் பரமசிவாராதனை செய்து கன்னியாரத்னமாகிய தேவகீ என்னும் பெண்ணையும்பெற்று அங்கு வாழ்ந்திருந்தனனாதலால்தேவகிபுரம் எனவும், அரம்பையும் பரமசிவாராதனை செய்து இந்திரனுக்கு ஊர்வசி முதலாயினரைக் காட்டிலுந்தான் அதிகப் பிரியையாவதற்குத் தவஞ்செய்யப் பிரமன் சிருஷ்டிசெய்த புரமாதலால் விரிஞ்சிபுரம் எனவும், உலகங்களுக்கெல்லாம் நாசத்தைத் தரும்படியான விஷம் நாகத்தினின்றும் தோன்றியபொழுது அதனை மஹாதேவர் அஞ்சாது கையிலேற்ற இடம் ஆதலால் நாகஹலாபுரம் எனவும் முறையே அவை பெயர் பெற்றன.

---

¶ சுவாமி புஷ்கரணி என்பது திருப்திக்குக் கிழக்கிலுள்ளது.